**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**
**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**CC No.39/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Latha | Prosecution | P.W- 1, L.W-1 |
| Father Name | Sadhasivam | Defence | |
| Village | Neithavasal | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 52/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **22.08.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது- அவரை நான் பார்த்ததில்லை. கடந்த 31.5.2019 ம் தேதி காலை 8.30 மணியளவில் திருவெண்காடு கடைத்தெருவிற்கு செல்வதாக கூறி என் கணவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் திருவெண்காடு சென்றுவிட்டு திரும்பி லிங்கத்தடி திடல் அருகே வந்து கொண்டிருந்தபோது மினி டெம்போ நான்கு சக்கர வாகனம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி என் கணவர் சென்ற அதே திசையில் வந்த டெம்போ என் கணவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக நேரில் பார்த்த எனது ஊரைச் சேர்ந்த ராஜேந்திரன் என்பவர் போன் மூலமாக தகவல் கூறினார். தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது வலது கால், வலது கை, தலை, மற்றும் கண் ஆகிய இடங்களில் பலத்த அடிபட்டிருந்தது. அவரை பயனியர் ஆட்டோவில் ஏற்றி பூம்புகார் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றேன். அங்கு முதலுதவி சிகிச்சை மட்டும் செய்துவிட்டு அங்கிருந்து தஞ்சாவூர் மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். அங்கு 10 நாடகள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். பின்னர் மருத்துவமனையிலிருந்து விடுவிப்பு செய்து வீட்டிற்கு வந்து உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். பின்னர் கை, கால் விளங்காமல் போனதால் மீண்டும் 15 நாட்கள் கழித்து தஞ்சாவூர் மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றேன். மீண்டும் அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் மேல்சிகிச்சைக்காக சென்னை ராஜிவ் காந்தி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தனர். அங்கு ஒரு வார காலம்

உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். பின்னர் சிகிச்சை பலனின்றி 7.7.2019 ம் தேதியன்று என் கணவர் இறந்துவிட்டார். இந்த விபத்தினை ஏற்படுத்தியது யாரென்று எனக்கு தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எனக்கு சொந்த ஊர் நெய்தவாசல் வீரமேட்டுத்தெரு என்றால் சரிதான். என் கணவர் சதாசிவம். என் கணவருக்கு விபத்து ஏற்பட்ட விவரத்தை ராஜேந்திரன் என்பவர் கூறினார். நான் தகவல் கேள்விபட்டு சம்பவ இடம் சென்றேன். அதன் பின்னிட்டு தான் தனியாக இருந்த என் கணவரை ஆட்டோவில் ஏற்றி பூம்புகார் ஆரம்ப சுகாதார மருததுவமனைக்கு அழைத்து சென்று அரை மணி நேரம் முதலுதவி எடுத்து கொண்டோம். சம்பவம் நடந்த தேதி 31.5.2019. அதன் பின்னிட்டு மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலிசார் என்னை விசாரித்த தேதி மாதம் நினைவில்லை. என் கணவர் விபத்து நடந்த ஒரு மாதம் கழித்து இறந்தார். போலிசார் என் கணவர் இறந்த பிறகு என்னை விசாரிக்கவில்லை. எதிரியை நேரடியாக எனக்கு தெரியாது. போலிசார் கூறிய பிறகு தான் எதிரி யாரென்று தெரியும். மகாலிங்கம் த.பெ. கோவிந்தராஜ் என் எதிர்வீட்டுக்காரர். ராஜேந்திரன் என் தெருக்காரர். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எதிரி யாரென்று குறிப்பிடவில்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதால் நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. நான் இழப்பீடு பெறுவதற்காக எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**

**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**CC No.39/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Rajendiran | Prosecution | P.W- 2, L.W-2 |
| Father Name | Ganesan | Defence | |
| Village | Neithavasal | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 55 /2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **<u>22.08.2024.</u>**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 2019 ம் வருடம் தேதி மாதம் நினைவில்லை. ஆஜர் எதிரியை நான் நெய்தவாசலில் பார்த்துள்ளேன். ஒருநாள் காலை 8.30 மணியளவில் திருவெண்காடடிற்கு வேலைக்கு செல்வதற்காக லிங்கத்தடி திடல் அருகே சென்று கொண்டிருந்தபோது, சதாசிவம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி XL வாகனத்தில் வந்து கொண்டிருந்தார்.Tata ace நான்கு சக்கர வாகனம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதே அதே திசையில் சென்ற சதாசிவத்தின் இருசக்கர வாகனத்தின் பின்புறமாக மோதி விபத்தை ஏற்படுத்தியதில் சதாசிவம் வயலில் சென்று விழுந்துவிட்டார். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது விபத்தை ஏற்படுத்தியவர் வாகனத்தை எடுத்து கொண்டு சென்றுவிட்டதால் அவரை நான் பார்க்கவில்லை. நான் பார்த்தபோது வலது கால், வலது கை, தலை, மற்றும் கண் ஆகிய இடங்களில் பலத்த அடிபட்டிருந்தது. சதாசிவத்தின் மனைவிக்கு போன் மூலம் விபத்து பற்றி தகவல் சொன்னேன். அவரை பயனியர் ஆட்டோவில் ஏற்றி சிகிச்சைக்காக அவரது மனைவி பூம்புகார் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றார். உடன் நானும் சென்றேன். அங்கு முதலுதவி சிகிச்சை மட்டும் செய்துவிட்டு அங்கிருந்து தஞ்சாவூர் மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு 10 நாடகள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். பின்னர் மருத்துவமனையிலிருந்து விடுவிப்பு செய்து வீட்டிற்கு வந்து உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். பின்னர் கை, கால் விளங்காமல் போனதால் மீண்டும் 15 நாட்கள் கழித்து தஞ்சாவூர் மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக

கொண்டு சென்றோம். மீண்டும் அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் மேல்சிகிச்சைக்காக சென்னை ராஜிவ் காந்தி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தனர். அங்கு ஒரு வார காலம் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். பின்னர் சிகிச்சை பலனின்றி 7.7.2019 ம் தேதியன்று சதாசிவம் இறந்துவிட்டார். இந்த விபத்தினை ஏற்படுத்தியவரையும், விபத்திற்கு காரணமானவரையும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் நெய்தவாசலில் வசிக்கிறேன் என்றால் சரிதான். போலிசார் என்னை 31.5.2019 ம் தேதி விசாரித்தார்கள். அதன் பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. அ.சா.1 எனது ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**CC No.39/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Mahalingam | Prosecution | P.W- 3, L.W-3 |
| Father Name | Govindaraj | Defence | |
| Village | Neithavasal | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 72/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **22.08.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது- அவரை நான் பார்த்ததில்லை. கடந்த 2019 ம் வருடம் தேதி மாதம் நினைவில்லை. ஒருநாள் காலை 8.30 மணியளவில் அ.சா.2 திருவெண்காட்டிற்கு வேலைக்கு செல்வதற்காக லிங்கத்தடி திடல் அருகே சென்று கொண்டிருந்தபோது, சதாசிவம் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது டெம்போ வாகனம் மோதி விபத்தினை ஏற்படுத்தியதாக சதாசிவத்தின் மனைவி லதாவிற்கு ராஜேந்திரன் தொலைபேசியில் தகவல் சொன்னபோது லதா வீட்டிற்கு அருகில் நான் இருந்ததால் தகவல் கேட்டு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். உடலில் பலத்த காயங்கள் ஏற்பட்டு மோசமான நிலையில் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 லதா என் ஊர்க்காரர் என்றால் சரிதான். சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் அ.சா.1 க்கு போன் மூலம் தகவல் வந்ததால் எனக்கு தெரியும்.

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**CC No.39/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Senthil | Prosecution | P.W- 4, L.W-5 |
| Father Name | Muniyandi | Defence | |
| Village | Thiruvenkadu | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 38/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **22.08.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 2019 ம் வருடம் 31 ம் தேதி மே மாதம் ஒருநாள் மதியம் 2.30 மணியளவில் வடபாதி லிங்கத்தடி திடல் அருகே நான் வீட்டிற்கு செல்வதற்காக சென்ற போது திருவெண்காடு போலிசார் என்னை விசாரித்து படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள் , தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பங்களில் 2 வது கையொப்பம் என்னுடையது. **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்கண்ட கையொப்பத்தினை விபத்து நடந்த இடத்திலேயே வைத்து செய்து கொடுத்தேன். என்னோடு மற்றொரு சாட்சி கையொப்பம் செய்தவர் சின்ன பெருந்தோட்டத்தை சேர்ந்த கலியமூர்த்தி ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது சொந்த ஊர் திருவெண்காடு என்றால் சரிதான். நான் விவசாய தினக்கூலி வேலை செய்து வருகிறேன். திருவெண்காட்டிலிருந்து லிங்கத்தடி 3 கி.மீ,. தொலைவு இருக்கும் என்றால் சரிதான். விவசாய வேலைக்காக சென்றுவிட்டு நெய்தவாசலில் இருந்து திருவெண்காடு திரும்பிவந்தேன். நாயக்கர் குப்பம் மதுகடியில் இருந்து திருவெண்காடு மெயின்ரோடு வந்தேன். காலை 6.00 மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு 2.30 மணிக்கு திரும்ப வருவேன். என்னுடன் கையெழுத்து செய்த கலியமூர்த்தியை எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு

எழுத படிக்க தெரியும். என் அப்பா பெயர் முனியாண்டி என்றால் சரிதான் . நான் கையெழுத்து செய்த பேப்பரில் எழுதி இருந்த விவரத்தை நான் படித்து பார்க்கவில்லை. போலிசாரும் படித்து காட்டவில்லை. போலிசார் கேட்டுக்கொண்டதால் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

**மறுசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.39/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Kaliyamoorthy | Prosecution | P.W-5, L.W-4 |
| Father Name | Pooman | Defence | |
| Village | chinnaperunthottam | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 55/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **22.8.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 2019 ம் வருடம் தேதி மாதம் நினைவில்லை ஒருநாள் மதியம் 2.30 மணியளவில் நீதிக்களத்திலிருந்து சின்னபெருந்தோட்டம் களம் அருகில் வந்துகொண்டிருந்தபோது கூட்டமாக இருந்தது. இந்த வழக்கு விபத்து சம்மந்தமாக போலிசார் விசாரித்து கொண்டிருந்தார்கள். படம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக என்னை கையெழுத்து செய்ய சொன்னார்கள். நானும் கையெழுத்து செய்தேன். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்துகளில் முதலாவது கையெழுத்து என்னுடையது **அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சொந்த ஊர் திருவெண்காடு சின்ன பெருந்தோட்டம் என்றால் சரிதான். நான் படிக்கவில்லை, கையெழுத்து மட்டும் செய்வேன், படிக்க தெரியாது என்றால் சரிதான். போலிசார் நான் கையெழுத்து செய்த பேப்பரை என்னிடம் படித்து காட்டினார்களா என்றால் படித்து காட்டினார்கள். என்னுடன் கையெழுத்து செய்தது செந்தில் த.பெ. முனியாண்டி, திருவெண்காடு, சீர்காழி என்பவர். நான் என் வீட்டிலிருந்து போகும் போது கையெழுத்து செய்தேன். என் பெயர் கலியமூர்த்தி, த.பெ. பூமான். போலிசார் என்னை மதியம் 2.30 மணிக்கு விசாரித்தார்கள், தேதி

நினைவில்லை. திருவெண்காடு போலிசார் விசாரித்தார்கள். விசாரித்த போலிஸ் பெயர் தெரியாது. டெம்போவில் அடிபட்டது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதால் நான் கையெழுத்து செய்தேன் என்றாலும் சரியல்ல.

**எதிரி ஆஜர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**